

முதல்வர், தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, காஞ்சிபுரம் மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பாராட்டி பதக்கம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி உரையாற்றினார். அருகில் மாவட்ட ஆட்சித்தலைவர் கலைச்செல்வி, நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வம், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் படப்பை ஆ.மனோகரன், மேயர் மகாலட்சுமி, உள்ளிட்டோர் உள்ளனர்.



நேற்று (16.06.2023) தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், போக்குவரத்துத் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத்துறை சிறப்புச் செயலாளர் தி.ந.வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழகங்களின் மேலாண் இயக்குநர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### கே.கண்ணன் எம்.சி தலைமை! கலைஞர்நகர் தெற்கு பகுதியில்

# முத்தமிழறிஞர் கலைஞரைப் போற்றும் ஆன்மீகப் பெருமக்கள் அரங்கம்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

சென்னை, ஜூன். 17

சென்னை தெற்கு மாவட்டம், கலைஞர்நகர் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா முன்னிட்டு இன்று (17.6.2023 சனிக்கிழமை) மாலை 5 மணிக்கு, ஏ.எல்.ஏ. பொன்னழகு திருமண மண்டபம், காளியம்மன் கோயில் தெரு, விருகம்பாக்கத்தில் நடைபெறுகிறது.

கலைஞர்நகர் தெற்கு பகுதிச் செயலாளர் கே. கண்ணன் எம்.சி. தலைமை வகிக்கிறார்.

விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, க.தனசேகரன் எம்.சி, மு.இராசா எம்.சி. ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

உ.துரைராஜ், பி.எஸ். முருகேசன், எஸ்.டி.தங்கராஜ், வாசுகி பாண்டியன், எஸ்.உமாபதி, பெ.தியாகு, கனிமொழி தனசேகரன், அ.பாபு, பூக்கடை ஆர்.பழனிச்சாமி, இராஜ்.செழியன், சோ.செந்தில்குமார், மு.அன்பழகன், பி.கே. குமார், அ.கதிரேசன், கே. சதீஷ்கண்ணன், மு. கோவிந்தராஜன், வழக்கறிஞர் வீ.ஏ.ராஜா, எஸ்.மைக்கேல், எஸ்.பாஸ்கரன், ஆர்.பாபு ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியை சென்னை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா. சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்.

“வான்புகழ் தலைவனைப் போற்றும் ஆன்மீகப் பெருமக்கள்” அரங்கத்தை குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், சிவஞான பாலயசுவாமிகள், சாந்தலிங்க மருதாசல அடிகளார், இராமானந்த குமாரகுருபார அடிகளார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

கவிஞர் இளையகம்பன் நிகழ்ச்சியை தொகுத்து வழங்குகிறார்.

இதில் தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன், எஸ்.அரவிந்த ரமேஷ் எம்.எல்.ஏ, காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ, துணை மேயர் மு.மகேஷ் குமார், கழக வர்த்தகர் அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம், மண்டலக்குழுத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி, சென்னை த.அரங்கநாதன் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

பகுதி துணைச் செயலாளர் அஜந்தா எஸ்.ரவி நன்றி உரையாற்றுகிறார்.

### மயிலை த.வேலு - தமிழச்சி தங்கபாண்டியன் - ஜெ.கருணாநிதி - கே.ஏழுமலை பங்கேற்பு!

# 130 ‘அ’ வட்டத்தில் - கலைஞர் நூற்றாண்டு விழா!

## வட்டச் செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில்!

சென்னை, ஜூன் 17-

சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் மேற்கு பகுதி 130 ‘அ’ வட்டக் கழகம் சார்பில் தமிழின தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு இன்று (17.06.2023) மாலை 6மணியளவில் வடபழனி, இராஜாங்கம் மத்திய வீதியில் பள்ளி மாணவ மாணவிகளுக்கு புத்தகப்பை மற்றும் 2022-23ஆம் கல்வியாண்டில் 10வது,12வது தேர்வில் முதல் மூன்று இடம் பிடித்த மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கும் விழா மற்றும் பொதுமக்களுக்கு சுத்தரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் திறப்பு விழா வட்டக்கழக செயலாளர் தட்சன் ஹரிஹரன் தலைமையில் நடைபெறுகிறது.

என்.எஸ்.பாலசுப்ரமணியன், ம.யூகலிங்கம், டி. கமல், ஆர்.கே.ஜெயமுருகேஷ், சாலி கே.மோகன், ஜெ.பாலு, பு.பத்மநாதன், டி.விஜயகுமார், கார்த்திக் சந்திரசேகசன், த.செந்தில்குமார், சீ.தினகரன், ஜெ.எஸ்.சினிவாசன், ஜி.ராமு, பா.முஜிப் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சிவசதிஷ், என். லோகேஷ், திருமதி.ராணி, என்.ஜி.ஒ.வேலு, எஸ்.சரவணன், ஓவியர் எஸ்.குமரன், எஸ்.ரமேஷ், அ. பொன்னுதுரை, உமா கேஷ்வரன், ஏ.கார்த்திகேயன், எம்.ஆனந்த்ராஜ், ப. சசிக்குமார், என்.எஸ். மணிகண்டன், என்.ஜி.ஒ. கோபி வரவேற்கின்றனர்.

சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.எ., நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., தியாகராயர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜெ. கருணா நிதி எம்.எல்.எ., பகுதி செயலாளர் கே.ஏழுமலை எம்.சி., கோ.சு. மணி, எஸ்.பாஸ்கர் எம்.சி ஆகியோர் விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கின்றனர்.


இதில்.எஸ்.மோகன், ஆ.சந்திரசேகர் கோடம்பாக்கம் மு.சத்யா, நந்தனம் வேதா, திருமதி எஸ். மலர், என்.ராமகிருஷ்ணன், பாபாசுரேஷ் க.சந்திரசேகர் சாந்திபங்காரு மு.மணிவண்ணன் இரா. பொன்னிவளவன் வி.பி. எஸ்.ஜெனார்தா எஸ். புஷ்பா, ந.மோ.முரளி கே.எஸ்.வெல்டிங்ராஜா பி.ஜெய்குமார் பி.மாரி, மு.ம.செந்தில்குமார், எம். கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி. செந்தில்குமரன் ஆர்.சக்திவேல், எம்.எஸ்.பழனி மு.செல்வகுமார் லலிதாபுரம் என்.துரை எஸ்.லட்சுமிகாந்தன், ராஜாஅன்பழகன் கார்த்திகாபாஸ்கர் கோமதிமணிவண்ணன் மற்றும் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

நா.பழனி, சு.தயாளன், டி.அலெக்ஸ் அ.ஜான்பீட்டர் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### நெல்லை கணபதி ராமசுப்பையா

### ஜூன் 17 (2006)



கழகத்தில் துவக்கக் காலந்தொட்டு உறுப்பினராக இருந்தவர். மாணவப் பருவத்திலிருந்தே திராவிட இயக்க உணர்வுடன் இந்தி எதிர்ப்பு, கம்யூனல் ஜி.ஓ. ரத்து, கருப்புக்கொடி, விலைவாசி உயர்வு எதிர்ப்பு, தேவிகுளம் பீர்மேடு மீட்பு உள்ளிட்ட அறப்போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர்.

மாணவர் தி.மு.க. சார்பில் நடைபெற்ற மாநாடுகளில் அமைப்பாளராக சிறப்புற பணியாற்றியவர்.

தனது நெருங்கிய நண்பர் பண்ருட்டி ராமச்சந்திரன் கழகத்திற்கு துரோகம் செய்து, கழகத்தைவிட்டு வெளியேறியபோதும் ‘தனது தலைவர் கலைஞர்தான்’ என்று தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

அண்ணாமலைப் பல்கலைக் கழக செனட் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**

# அமெரிக்காவில் கடும் சூறாவளி காற்றுடன் மழை 3 பேர் பலி

டெக்சாஸ், ஜூன் 17-

அமெரிக்காவின் டெக்சாஸ் நகரில் கடுமையான சூறாவளி காற்றுடன் மழை கொட்டியது. இந்த சூறாவளி காற்றுக்கு தாக்கு பிடிக்க முடியாமால் ஏராளமான மரங்கள் வேரோடு சாய்ந்தது. வீடுகளின் மேற்கூரைகள் பறந்தது. கட்டிடங்களின் கண்ணாடிகளும் உடைந்து நொறுங்கியது. ஏராளமான வீடுகள் சேதம் அடைந்தது. தொடர்ந்து பெய்த மழையால் ரோடுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

கொலராடா, அர்சான்சஸ், புளோரிடா உள்ளிட்ட பகுதிகள் இந்த சூறாவளி காற்றுக்கு கடுமையாக பாதிக்கப்பட்டன. ரோட்டில் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த கார் உள்ளிட்ட வாகனங்கள் பலத்த சேதம் அடைந்தது. இதனால் பொது மக்களின் இயல்பு வாழ்க்கை முற்றிலும் முடங்கி போய் உள்ளது. சூறாவளி காற்றுடன் பெய்த மழைக்கு 3 பேர் பலியாகி விட்டனர். 100 க்கும் மேற்பட்டவர்கள் காயம் அடைந்தனர். அவர்கள் சிகிச்சைக்காக மருத்துவமனை அனுமதிக்கப்பட்டு உள்ளனர். மீட்பு பணிகள் அங்கு முடுக்கிவிடப்பட்டு உள்ளன.

### கட்டணமில்லா பேருந்து பயண திட்டத்தின் மூலம்

# 297.71 கோடி பயணங்கள் மகளிர் மேற்கொண்டனர்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தகவல்!

சென்னை, ஜூன்.17-

முதலமைச்சர் அவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்ட மகளிர் கட்டணமில்லா பயண திட்டத்தின் வாயிலாக, மகளிர் 297.71 கோடி பயணங்கள் மேற்கொண்டதை ஆராய்ந்து மேலும் இத்திட்டத்தை செம்மைப்படுத்தும் விதமாக புதிய பேருந்துகளை அறிமுகப்படுத்துதல் தொடர்பாக, நேற்று தலைமைச் செயலகத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆலோசனை நடத்தினார்.

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில், நேற்று (16.06.2023), தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் க.பணீந்திர ரெட்டி, போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் தி.ந. வெங்கடேஷ், அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், தனி அலுவலர் மற்றும் உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

### புதிய பேருந்துகள் அறிமுகம்!

இவ்வாலோசனைக் கூட்டத்தில், போக்குவரத்துத்துறை அமைச்சர், பொதுமக்கள் பெரிதும் சார்ந்துள்ள பேருந்து போக்குவரத்தினை நிறைவாக அளித்திட புதிய பேருந்துகளை விரைவில் அறிமுகப் படுத்திட வேண்டும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, புதிய பேருந்துகளின் ஒப்பந்தப் புள்ளிகளை குறித்தும், பழைய பேருந்துகளை புதுப்பித்தல் நிலை குறித்தும் ஆய்வு செய்து, அதனை விரைவில் நடைமுறைப்படுத்திட வேண்டும் என தெரிவித்தார்.

### கருணை அடிப்படையில் வேலை!

மேலும், தற்போது தமிழகம் முழுவதும் பள்ளிகள் திறக்கப்பட்டுள்ள நிலையில், மாணவ / மாணவியர்களுக்காக இயக்கப்படும் பேருந்துகளின் எண்ணிக்கை குறித்து கேட்டறிந்து, தேவைக்கு ஏற்ப கூடுதல் பேருந்துகளை இயக்கிட வேண்டும் எனவும், பள்ளிகள் துவங்குவதற்கு முன் பேருந்துகள் பள்ளியை சென்றடையும் வகையில் இயக்கிட வேண்டும் எனவும் அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழங்களில் உள்ள காலிப்பணியிடங்களை விரைவாக நிரப்பிட பணிகளை துரிதப்படுத்திட வேண்டும் என கேட்டுக் கொண்டார்கள். மேலும், போக்குவரத்துக் கழகங்களில், பணியின் போது இறந்த பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையிலான வேலை வாய்ப்பினைவழங்கிட நடவடிக்கை எடுத்திட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களில் ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த பணியாளர்களின் பணப்பலன்களை அவர்கள் ஓய்வு பெறும்போதே வழங்கிட முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என ஆலோசனை வழங்கினார். போக்குவரத்துக் கழகங்களில், பேருந்துகளின் இயக்க வருவாய் மற்றும் செலவுகள், இதர வருவாய் மூலம் நிதியை பெருக்குதல், செலவுகளை குறைத்தல் மற்றும் தற்போது செயல்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்தார்கள்.

தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர்களின் மன அழுத்தத்தை போக்கும் வகையில், விளையாட்டுகளை மீண்டும் அறிமுகப் படுத்தி அவர்களை ஈடுபடுத்திட வேண்டும் என தெரிவித்தார். மேலும், போக்குவரத்துக் கழகங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் குறைகளை அவ்வப்போது கேட்டறிந்து அதனை நிவர்த்தி செய்திட வேண்டும் என அறிவுத்தினார்.

### திருவல்லிக்கேணி

# 119 ‘அ’ வட்ட அவைத் தலைவர் ச.மதிவதனன் மறைவு!

## நே.சிற்றரசு - முன்னணியினர் அஞ்சலி!

சென்னை, ஜூன் 17-

சென்னை மேற்கு மாவட்டம் திருவல்லிக்கேணி பகுதி 119 (அ)வட்ட கழக அவைத் தலைவர் மூத்த உறுப்பினர் ச.மதிவதனன் அவர்கள் டி. டி.கே.சாலை ,லஷ்மி புரம் இல்லத்தில் இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். அதே பகுதி பிரதிநிதி கோ.தனசேகரன் அவர்களுடைய தாயார் பட்டம்மாள் கோவிந்தராஜ் அவர்கள் இராயப்பேட்டை கொளடியா மடம் சாலையில் உள்ள இல்லத்தில் காலமானார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம். இருவருக்கும் சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் நே.சிற்றரசு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்.

உடன் மாவட்ட கழக துணை செயலாளர் ஆர்.என்.துரை, மாமன்ற உறுப்பினர் கமலா செழியன், வட்ட கழக செயலாளர்கள் லைனர், கே.பிரபு, க. வே.மோகன், மாவட்ட பிரதிநிதி ஏ.பி.வேலு, மோ.பிரபு, எம். எஸ்.வசந்தன், ச.ரமேஷ், சி. வாசன், ஆர்.ராதாகிருஷ்ணன், டி.செபஸ்டின், மு.அசோக், மே.நவநீதன், நந்தகுமார், ஆர். சிலம்பரசன், ஆர்.பாபு, வே. சௌந்தர்ராஜன், சுந்தர், ஆர். ஜெயக்குமார், ஆர்.ரஞ்சித்குமார், க.பாலாஜி சேகர், பி.மாரி, மைதிலி ஜெயகுமார் ஆ. காமாட்சி, கற்பக சுரேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இறுதி ஊர்வலம் முடிவில் மைலாப்பூர் மயானத்தில் எரியூட்டப்பட்டது.

